


# ஆதித்தமிழன்

ஆதித் தமிழர் பேரவையின் மாத இதழ்



திருவள்ளுவர் ஆண்டு 2037 | சனவரி, 2007 | இதழ் : 8 | தனிச்சுற்றுக்கு மட்டும் | நன்கொடை ரூ.3/-

# கவன ஈர்ப்பு தொடர் முழக்கப் போராட்டம்

ஆதித்தமிழர் பேரவையின் மையக்குழு திருப்பூரில் முடிவு செய்து, கோவையில் 28.10.2006 அன்று செயற்குழுவில் கேட்டுக்கொண்டபடி திட்டமிட்டபடி 18.12.2006 அன்று சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பாக புரட்சியாளர் அம்பேத்காரின் நினைவு நாளை ஒட்டி மைய-மாநில அரசுகளின் கவன ஈர்ப்பு தொடர் முழக்க போராட்டம் நடைபெற்றது.

தொடர்முழக்க போராட்டம் சத்தியமங்கலம் தோழர் பெரியசாமி அவர்களின்

"எரிமலை எரிமலை எரிமலை !

இளைஞனே !

நீ ஒரு எரிமலை

புறப்படு புறப்படு புறப்படு

புயலென நீயும் புறப்படு"

என்ற இயக்க பாடலுடன் துவங்கியது. போராட்டத்திற்கு



முன்னதாக தலைமையிலிருந்து அழைப்பிதழ்களும், சுவரொட்டிகளும், நன்கொடை ரசீது புத்தகங்களும் வழங்கப்பட்டன. அது மட்டுமல்லாமல் மாவட்ட பொறுப்பாளர்களும் துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்களும் தமிழகமெங்கும் விளம்பரம் செய்தார்கள். இந்த தொடர் முழக்கப் போராட்டத்திற்கு தமிழகம் முழுவதுமுள்ள ஆதித்தமிழர் பேரவையின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் 50 பேருந்துகளில், சிற்றுந்துகளிலும் மற்றும், தொடர் வண்டிகளிலும் பெருந்திரளாக வந்து கலந்துகொண்டு, 5000 தோழர்கள் அன்று தொடர் முழக்க போராட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

ஆதித்தமிழர் பேரவை தலைவர் நிறுவனர் தோழர் இரா.அதியமான் அவர்கள் தலைமைதாங்கினார். பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் பழ.நீலவேந்தன் போராட்டத்திற்கு வந்திருந்த அனைத்து கட்சித் தலைவர்களையும், பேரவையின் பொறுப்பாளர்களையும், ஆதித்தமிழர் சொந்தங்களையும் மற்ற அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதன் விபரம் வருமாறு :

தடைச்சட்டத்தின் அவசியம் பற்றியும் அருந்ததியர்கள் சமுகத்தில் புறக்கணிக்கப்பட்டும் கையால் மலம் அள்ளும் தொழிலாளர்களாக மாற்றப்பட்டுக்கக் கூடிய நிலைகளையும், 1993-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கையால் மலம்அள்ளும் தடை சட்டத்தின் குறை நிறைகளையும், ஆதித் தமிழர் பேரவையின் தொடர்ச்சியான நடவடிக்கைகளை பட்டியலிட்டும், இரயில்வே போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் கையால் மலம் அள்ளும் தொழிலை கண்டித்தும் மாற்றக்கோரியும்,கப்பிரைட் ஆக்ட் நடைமுறையில் இருக்கும்போது திருட்டிடு வி.சி.டி தடுப்புச் சட்டம் கொண்டு வந்துள்ளதையும் பெண் வதை தடுப்புச் சட்டம் இருக்கும்போது பெண்கள் கேலி தடுப்புச் சட்டம் கொண்டு வந்ததையும், சுட்டிக்காட்டி 1993-ம் ஆண்டு சட்டம் நடைமுறையில் இருக்கும்போது கையால் மலம் அள்ளுவதை தடுக்க புதிதாக சட்டம் கொண்டு வரவும் என்று வலியுறுத்தி பேசினார்.

தொடர் முழக்க போராட்டத்தை தொடங்கி வைத்து பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் என்.வரதராஜன் பேசுகையில் : இந்த தொடர் முழக்கப் போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை முழக்கம் என்றும் அருந்ததிய மக்களின் கல்வி, சமூக பொருளாதார நிலை குறித்தும் தொடர் முழக்க போராட்டம் மனித நேய கோரிக்கை என்றும் பெரியார், அண்ணா, ஜீவா பிறந்த மண்ணில் மேற்கு வங்காளத்தைப் போல கையால் மலம் அள்ளும் தொழில் தமிழ்நாட்டில் ஒழிக்கப்படாதது ஏன்? என்றும் கேட்டார். இத்தகைய அவல நிலைக்கு தீர்வு காணும் வரை உங்களோடு தோளோடு தோள் நின்று போராடுவதாகவும் அவர் கூறினார்.

அடுத்து பேசிய தமிழக மனித உரிமை கழகத்தின் பொதுச்செயலாளர் அரங்க.குணசேகரன் பேசுகையில் மனிதக் கழிவை மனிதன் அகற்றும் அவலம் ஒரு தொழிலாக, பிரச்சினையாக பார்க்கக்கூடாது. இந்த தொழில் ஒரு சமூகத்தின் பேரில் இட்டுக்கட்டப்பட்டுள்ள அவலமாக பார்க்கப்படவேண்டும். இந்து சமூக அமைப்பு இந்திய முதலாளித்துவ உற்பத்தி முறை - சாதிய உற்பத்தி உறவு இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஒடுக்கப்பட்ட மக்களை குறிப்பாக அருந்ததியர்கள் போன்ற அடித்தட்டு மக்களை மலம் அள்ளுவதற்காகவே பிறந்தவர்கள் போல சித்தரித்துக்கொண்டு இந்த சமூகத்தில் அவர்களை மிக அடிநிலையிலேயே வைத்திருக்கிறார்கள். எல்லா சமூகங்களும் போல ஆதித்தமிழர்கள்-அருந்ததியர்கள் இந்த நாட்டினுடைய பூர்வ

தொடர்ச்சி 2-ம் பக்கம்






ஆதித் தமிழர் பேரவையை தம் உயிர்த்துடிப்பாகவும். மூச்சாகவும் கொண்டு செயலாற்றிய பேரவையின் மேற்கு மண்டல செயலாளர் தளபதி கிட்டு (எ) கிட்டுசாமி கடந்த 5.1.2007 அன்று உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார். பேரவைத் தோழர்கள் திரளாக பேரவையின் தலைவர், நிறுவனர் இரா.அதியமான், பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் நீலவேந்தன் மற்றும் பேரவையின் மைய, மாநில, மாவட்ட, கிளை *நிர்வாகிகளுடன் அமைதி ஊர்வலம் சென்று தோழரின்* நினைவிடத்தில் வீர வணக்கம் செலுத்தினர். தோழரின் மறைவிற்கு அவர்தம் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் மற்றும் ஆதித்தமிழர் சொந்தங்கள் அனைவருக்கும் ஆதித்தமிழன் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

● அரசுப் பேருந்தில் சக மனிதனுக்கு சமமாய் உட்கார்ந்து பயணம் செய்ததற்கு ஆதிக்கச் சாதியர்களால் கல்லால் தாக்கிக் கொல்லப்பட்ட செதுடந்தாளி முருகேசனின் 7-ம் ஆண்டு நினைவு நாளான 17.11.2006-ல் அவருடைய நினைவிடத்தில் பேரவை வீரவணக்கம் செலுத்தியது.

பேரவைத் பொதுச் செயலர் நீலவேந்தன், *அவைத்தலைவர் கணப்பிரார், தலைமை நிலையச் செயலர்* இளவேனில் கோவை மேற்கு மாவட்டத் தலைவர் வெண்மணி, மேற்கு மாவட்டச் செயலாளர் தென்னரசு, கிழக்கு மாவட்டச் செயலாளர் அ.சு.பவுத்தன் உள்ளிட்ட பேரவை தோழர்கள் முழக்கங்களுடனும் உரையுடனும் வீரவணக்கம் செலுத்தினர்.

முதல் பக்க தொடர்ச்சி



விவசாய குடியக்கள். அனைத்து சமூகத்தினர் போல வேளாண்மையும், தொழில் துறையும், வணிகமும் அரசு பணியாளர்களாக ஆவதற்கான எல்லா திறமையும், தகுதியும், ஆற்றலும் முன் நிபந்தனையாக கொண்டர்வகள். ஆனால் இன்றைக்கு இட ஒதுக்கீடு பேசுகின்றபோது 100-க்கு 97 விழுக்காடு இருக்கக்கூடிய துப்புரவுப் பணியில் துப்புரவு பணி என்கிற ஒரு அரசு முறை. நகராட்சி, உள்ளாட்சி பணிகளுக்குள் உள்ளடக்கி, ஒரு சமுதாயத்தையே துப்புரவு பணியில் தள்ளியிருக்கிற சமூக, சாதிய வர்ணாசிரம தர்மத்தினுடைய கொடுமையை இந்த மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. இந்த சமூக கொடுமையை எதிர்த்து கலந்தாய்வதற்கு மனித உரிமைகள் பற்றி மனித நேயத்தைப் பற்றி பேசுகிற பேராளிகள் அத்துணை இயக்கங்களும் ஒன்று சேர்ந்து வீதியில் இறங்கி போராட வேண்டும் என்று முழங்கினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில துணைச் செயலாளர் சி.மகேந்திரன் பேசுகையில், நீங்கள் உங்கள் அமைப்பிற்கு ஆதித்தமிழர் பேரவை என்று பெயர் வைத்திருக்கிறீர்கள். யார் ஆதித்தமிழர் என்று ஆராய்ந்து தேடிப்பார்த்தால் நீங்கள்தான் ஆதித்தமிழர்கள்.

இந்த பார்ப்பனிய சமூகம் சாதிய ஒடுக்குமுறையில் எவன் ஒருவன் வீரம் மிக்கவனாக இருக்கிறானோ, அவனை தோளோடு சம்மந்தப்பட்ட வேலையை செய்ய வைக்கவேண்டும். எவன் ஒருவன் வீரம் பொருந்தியவனாக இருக்கிறானோ, அவனை மலம் அள்ள வைக்க வேண்டும் என்று அடிமைப்படுத்தி வைத்ததால் நீங்கள் ஆதித் தமிழர்கள். இந்தியாவிற்கு ஒரு அவமானம் இருக்கிறது என்று சொன்னால் தன் சொந்த சகோதரனையே மலம் அள்ள வைப்பதுதான் என்று கூறினார். இந்த செயலை நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி அவமானம் என்று கூறுகிறது. வருகின்ற சட்டமன்ற கூட்டப்பேரவையில் கம்யூனிஸ்ட் தோழர்கள் வரைவை முன்மொழிவார்கள். இதை யார் கேட்கிறார்கள். கேட்க மாட்டார்கள் என்று எங்களுக்கு கவலை இல்லை என்று கூறினார். மலம் அள்ளுவோருக்கு என்று தனி நல வாரியம் அமைக்க வேண்டும். அதற்கான திட்டத்தை ஆதித்தமிழர் பேரவை தந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி அதை வழிமொழிகிறது என்றார்.


உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் குரியகோஸ், மலம் அள்ளுவோர் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதற்காக அந்த தொழில் இழிவாக பார்க்கப்படுகிறது. மலம் அள்ளும் தொழில் இழிவான தொழில் என்று யார் சொன்னார்? எதில் சொல்லப்பட்டுள்ளது. மனு தர்மத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால் எல்லா தாய்களும் மலம் அள்ளுபவளே, அதில் பார்ப்பானுடைய தாயாக இருந்தாலும் மலம் அள்ளுபவளே என்று கூறினார். 1993-ம் ஆண்டு தடைச்சட்டத்தில் உள்ள நிறை குறைகளை சுட்டிக்காட்டிப் பேசினார்.



அடுத்து தோழர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், உலகத்தில் காட்டுமிராண்டிகள் என்று சொல்லப்படுகிறவன்கூட இந்த இழிவான செயலைக்கண்டு காரித்துப்பி, இந்த தேசத்தை காலில் போட்டு மிதிப்பான். முதலில் மானமுள்ள மனிதனாக ஒருவன் இருந்தால் முதலில் இதற்கு அவன் குரல் கொடுக்கவேண்டும். நீங்கள் தமிழ் தேசியம் பேசினாலும் சரி, இந்திய தேசியம் பேசினாலும் சரி, இதைப்பற்றி பேசாமல் நீங்கள் எதையும் பெறமுடியாது என்றார். முதலில் மனிதனாக இரு, அப்புறம் தமிழனாக இருப்பாய். இந்த இயக்கத்திற்கு எதிரானவர்கள் மனித துரோகிகள், மனித உரிமை துரோகிகள், வர்ணசிரம பாதுகாவலர்கள். பார்ப்பானுடைய அடிவருடிகள் என்று முழக்கமிட்டார்.

தலித் முரசு ஆசிரியர் புனித பாண்டியன் பேசுகையில், தலித் பிரச்சினைகளிலேயே முக்கியமான பிரச்சினை இந்த மலம் அள்ளும் பிரச்சினை. இதைப்பற்றியே நாம் பேசியே ஆகவேண்டும். இதில் எந்த இயக்கங்களும் இதற்காகவே குரல் கொடுக்க தயார் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். கோடிக் கணக்கான ரூபாயை ஒதுக்கி இந்த அரசாங்கம் இந்த பிரச்சினையை சரிசெய்யவில்லை என்று முழக்கம் செய்து மலம் அள்ளுவோரின் பிரச்சினைதானே என்கிறதாக பெரும்பான்மை சமூகத்தின் புத்தி இருக்கிறது. மனிதர் மலம் பிரச்சினைக்காக தலித் முரசு தொடர்ந்து போராடி வருகிறது என்று முழக்கமிட்டார்.

அடுத்து பேசிய பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பேசுகையில், ஆதித் தமிழர் பேரவை நடத்தும் ஒவ்வொரு போராட்டத்திலும் நானும் இணைந்து கொண்டிருக்கிறேன். இந்த போராட்டம் தமிழர்களுக்காக அல்ல, இந்தியர்களுக்காக, மனிதர்களுக்காக நடத்தப்படுகிறது. அதனால் ஒவ்வொருவரும் இதில் கலந்துகொள்ளவேண்டும். மலம் அள்ளுவதை தொழிலாக பார்ப்பது பிழையாகும். இது தொழில் அல்ல இழிவாகும். இந்த தொடர் முழக்க போராட்டத்தை மலம்



## கண்டன ஆர்ப்பாட்டம்

மத்திய மாநில அரசுகளை கண்டித்து ஆதித்தமிழர் பேரவைத்தோழர்கள் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்


1. உத்திரபிரதேசம், கான்பூரில் அம்பேத்கர் சிலை உடைப்பைக் கண்டித்தும், கர்நாடக மாநிலத்தில் அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை போட்டதைக் கண்டித்தும்,

3. திருச்சி ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் உள்ள பெரியார் சிலை உடைப்பைக் கண்டித்தும்

4. சாதி மதக் கலவரத்தை தூண்டப்பார்க்கும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரியும்.ஈரோடு நகராட்சி அலுவலகம் முன்பு 09.12.2006 சனிக்கிழமைகாலை 11 மணிக்கு மாவட்ட தலைவர் இரா.வீரகோபால் தலைமையில்,



கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மண்டல செயலாளர் அ.கிட்டு, மாநில அமைப்பாளர் பெருமாளவன், மாவட்ட நிதிச் செயலர் பொன்னுசாமி, மாவட்ட இளைஞரணி செயலர் சேகர் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன உரை நிகழ்த்தினர். பெருந்திரளான பேரவை தொண்டர்களும், ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். முடிவில் நகரத்தலைவர் வீரக்குமார் நன்றி கூறினார்.




அள்ளுவதை தடை செய்யும் போராட்டமாக பார்க்கவில்லை, சாதி ஒழிப்பு போராட்டமாக பார்க்கிறேன் என்று முழக்கமிட்டார்.

காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் பீட்டர் அல்போன்ஸ் பேசுகையில், இது ஒவ்வொரு இந்தியனுக்கும் அவமானமாக இருக்கும். மலம் அள்ளும் தொழிலுக்கு தொடர் முழக்க போராட்டம் தேவைப்படுகிறது என்று சொன்னால் இந்த தொழிலுக்கு தடைச் சட்டம் கொண்டுவர போராட்டம் தேவைப்படுகிறது என்ற அவமானத்தால் தலை குனிந்து நிற்கிறேன் என்று சொன்னால் சரியாக இருக்கும். மலம் அள்ளும் தடைச் சட்டத்தை சட்டமன்றத்தில் நான் முன் மொழிவேன் என்று கூறினார். இப்போராட்டக்தில் பேசிய கல்விமணி பேராசிரியர் அ. மார்க்ஸ், தோழர் கு. பாலசுப்பிரமணியன் ஆகியோரும் முழக்கமிட்டனர்.

பேரவைத் தலைவர் இரா.அதியமான் பேசுகையில், சகோதரர்கள் என்கிற தலித் அமைப்புகள் கூட மலம் அள்ளும் தொழிலை எதிர்த்து இயக்கம் நடத்தவில்லை. தீர்மானம் நிறைவேற்றவில்லை. பொதுவுடமை இயக்கங்கள் கூடி மலம் அள்ளும் தொழிலை ஒழிக்கவில்லை. மாறாக பணி நிரந்தரம் ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளை எழுப்பி வந்தார்கள். இந்த போராட்டம் ஒட்டுமொத்த சமூகத்திற்கு அவமானம். விழாக்காலங்களில் கழிப்பிடங்களை தூய்மை செய்வது யார்?. சுனாமி வந்தபோது இராணுவம் இறந்த உடல்களை அப்புறப்படுத்தவில்லை. அருந்ததியர்களே அப்புறப்படுத்தினார்கள். மலம் அள்ளும் தொழிலார்களுக்கு காப்பீடு இல்லை, உயிரிழந்தால் எவ்வித நஷ்ட ஈடும் இல்லை. சமூக பொருளாதார தளங்களில் கீழ் நிலையில் இருக்கிறார்கள் என்ற விவரங்களை துல்லியமாக எடுத்துக்காட்டி மலம் அள்ளும் தொழிலை கைவிடவேண்டும் என்றார். அரசு அதற்கு தடைச்சட்டம் இயற்றவேண்டும் என்று முழக்கமிட்டார்.

இறுதியில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் கோ.கா.மணி தொடர் முழக்க போராட்டத்தை முடித்துவைத்து முழக்கமிட்டார். சிறப்பு அழைப்பாளர்களுக்கிடையே பேரவை நிர்வாகிகளும் முழக்கமிட்டார்கள். திரண்டிருந்த பெரும் கூட்டத்தினையேயான முழக்கம் விண்ணை முட்டுவதாக இருந்தது. இந்த முழக்கம் ஜார்ஜ் கோட்டையையும், டெல்லியையும் முட்டியதா? பார்ப்போம்.











## கண்டன ஆர்ப்பாட்டம்

நெல்லை மாவட்டம் குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியத்துக் குட்பட்ட நக்கல முத்தன்பட்டி ஊராட்சி மன்ற தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அருந்ததியர் சாதியைச் சேர்ந்த சக்கையன் அந்த ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருப்பதி ராஜா என்றும் நாயுடு சாதியைச் சேர்ந்த சாதி வெறியனால் மண்வெட்டி கணையால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

கொலை நடந்த அன்றே பேரவை துணைப்பொதுச் செயலர் கண்ணன், தூத்துக்குடி மாவட்டச் செயலர் மனோகரன் உள்ளிட்டோரும், மறுநாள் பேரவைப் பொதுச்செயலாளர் நீலவேந்தன், தலைமை நிலையச் செயலர் இளவேனில், மய்யக்குழு உறுப்பினர் சு.க.சங்கர், நெல்லை மாவட்டச் செயலர் மந்திரமூர்த்தி உள்ளிட்டோரும் சக்கையன் வீட்டிற்கு நேரில் சென்று வந்தனர்.

இப்படுகொலையைக் கண்டித்து 3.12.2006 அன்று நெல்லை மாவட்ட பேரவை சங்கரன்கோவிலில் ஆர்ப்பாட்டம் நெல்லை மாவட்டச் செயலர் மந்திரமூர்த்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

## சமூகநீதிப் பயணம்

9.11.2006 அன்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர்கல்வி நிறுவனங்களான அய்.அய்.டி, அய்.அய்.எம் போன்றவற்றில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை ஒரே தவணையில் நடைமுறைப்படுத்தக் கோரி சம்பூகன் சமூகநீதிப் பயணத்தின் இரண்டாம் கட்ட பிரச்சாரத்தை பெரியார் திராவிடர் கழகம் நான்கு முனைகளில் துவக்கி திருச்சியில் முடித்தது.

சென்னையில் துவங்கிய பயணம் விடுதலை ராசேந்திரன் தலைமையிலும், தூத்துக்குடியில் துவங்கிய பயணம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், மேட்டூரில் ஆனூர் ஜெகதீசன் தலைமையிலும், பழனியில் பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையிலும் பயணங்கள் கிளம்பியது. இதில் பழனியில் துவங்கிய பயணத்தை பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் தொடங்கி வைத்தார்.

## கண்டன ஆர்ப்பாட்டம்

20.11.2006 அன்று மகாராட்டிரா மாநிலம், கயர்லாஞ்சியில் நடத்தப்பட்ட சாதிய வெறியாட்டத்தை கண்டித்து சேரிஸ்தான் அமைப்பு சென்னை மெமோரியல் ஹால் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

சேரிஸ்தான் அமைப்பாளர் வழக்கறிஞர் ரஜினி தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய குடியரசுக் கட்சித் தலைவர் சக்திதாசன், பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் உள்ளிட்ட பல்வேறு தலித் இயக்கத் தலைவர்கள் கலந்துகொண்டு கண்டன

## சமூக எழுச்சி கருத்தரங்கம்

21.11.2006 அன்று ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களான அருந்ததியர்களை அமைப்பாக்கப்பட்ட அரசியல் சக்திவாய்ந்த நீண்ட நெடிய பயணத்தில் ஓர் அங்கமாக உதகை மாவட்ட பேரவை சமூக எழுச்சி கருத்தரங்கை உதகையில் நடத்தியது.

மாவட்டத் தலைவர் வசந்தா துரை தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அவைத்தலைவர் களப்பிரார், மகளிரணித் தலைவர் தீபா, மேற்கு மாவட்டச் செயலர் தென்னரசு, தென் மண்டலச் செயலர் திருவள்ளுவன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர்.

## கண்டன ஆர்ப்பாட்டம்

இந்துத்துவ வருணாசிரம வெறியளர்களால் இன்றளவும் சீரணித்துக்கொள்ள முடியா சொல்லாக இயங்கும் பெரியார் என்னும் மாபெரும் புரட்சியாளரின் சிலை திருவரங்கத்தில் 7.12.2006 அன்று கோவையில் இருந்து சென்ற இந்து மக்கள் கட்சி அரக்கர்களால் சேதபடுத்துப்பட்டதைக் கண்டித்து அன்றே மாலை 4 மணிக்கு கோவை செஞ்சிலுவை சங்கம் பெரியார் திராவிடர் கழகம் அதன் பொதுச்செயலாளர் ராமகிருட்டிணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இதில் பேரவைச் செயலர் நீலவேந்தன், அவைத்தலைவர் களப்பிரர், மகளிரணி செயலர் தீபா ஆகியோர் கலந்துகொண்டு பேரவை சார்பில் கண்டனத்தை பதிவு செய்தனர். மேற்கு மாவட்டத் தலைவர் வெண்மணி, மாநகரச் செயலர் சிவா, இளைஞரணி செயலர் கதிரவன் உள்ளிட்ட பேரவை தோழர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

◆◆◆

கான்பூரில் புரட்சியாளர் அம்பேத்கார் சிலையும், திருவரங்கத்தில் பெரியார் சிலையும் சேதப்படுத்தப்பட்டதைக் கண்டித்து மதுரை மாவட்டப் பேரவை 8.12.2006 அன்று தல்லாகுளம் தந்தி அலுவலகம் எதிரே மாவட்டத் தலைவர் விடுதலை வீரன் தலைமையில் ஆர்பாட்டம் நடத்தியது.

பேரவைத் பொதுச்செயலர் நீலவேந்தன், நிதித் செயலர் சித்தார்த்தன், தென் மண்டலச் செயலர் நாகை.திருவள்ளுவன் உள்ளிட்ட பேரவை தோழர்களும், பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட தோழமை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் கண்டன உரையாற்றினர்.

◆◆◆

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கம் நோய்வாய்ப்பட்டு 14.12.2006 அன்று இலண்டனில் மறைந்ததையொட்டி, 15.12.2006 அன்று மாலை கோவை பெரியார் படிப்பகத்தில் ஆண்டன் பாலசிங்கம் படத்திறப்பு - இரங்கல் கூட்டம் பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலர் கு.ராமகிருட்டினன் தலைமையில் நடந்தது.

# மாற்றுத் தொழில்களின் அவசியம்

**விடுதலை வீரன்**

அரசு செலவின குறைப்பு என்ற பெயரில் இன்று 13க்கும் மேற்பட்ட அரசு பொதுத் துறைகளை இலாபம் இல்லை என்று சொல்லி அரசு தனியார் மயமாக்கி வருகின்றது. இதில் துப்புரவு பணியும் விதி விலக்கல்ல. காசு இல்லாதவன்தான் குப்பை பொறுக்கின்றான் என்றால் இன்று தனியார் முதலாளிகளும் குப்பை பொறுக்க போட்டி போட்டுக்கொண்டு வருகின்றனர்.

சுத்தமான தண்ணீர், சுகாதாரமான காற்றும் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் கிராமத்தில் இருந்து நகரத்தை நோக்கி மக்கள் வரக் காரணம் கிராமத்தில் வரட்சி வேலை இல்லாத் திண்டாட்டம், ஒரு புறம். தலித் மக்கள் மீதான சாதியக் கட்டுமான அடக்குமுறைகள் மறுபுறம். இவைதான் மக்களை நகரத்தை நோக்கி தள்ளக்காரணம். ஆங்கிலேயர் வருகைக்கு பின் நகரம் வளரத் தொடங்கியது.

தொழிற்சாலைகள், மருத்துவ மனைகள் போன்றவற்றில் மக்கள் வருகை அதிகரிக்கத் தொடங்கியது. இயல்பாகவே மனிதக் கழிவுகள் சாக்கடைகள் பெருகத் தொடங்கியது. இவைகளை சுத்தம் செய்வதற்கு யாரும் முன்வராத நிலையில் இவர்களின் பார்வை சேரியை நோக்கித் திரும்பியது. அனைத்து நிலைகளிலும் புறக்கணிக்கப்பட்டு சேரிச் சிறையில் அடைக்கப்பட்ட மக்களை குறிப்பாக அருந்ததியர்களை கட்டாயப்படுத்தி மனிதக் கழிவுகளை அள்ள வைத்தனர். காலத்தின் கட்டாயம் இதுவே நிலையான வேலையாக மாறியது. அதனுள் நெளிந்தும், சுழிந்தும் வாழ பழகிக் கொண்டனர். இன்று அதிலிருந்து மீளமுடியாத சூழலுக்கு தள்ளப்பட்டனர். இப்போது மக்களுக்கு இருக்கும் வாழ்வின் ஆதாரம் துப்புரவுப்பணி ஒன்று மட்டும்தான். அதுவும் இப்போது அரசு நிர்வாகத்திடம் இருந்து தனியார் கம்பெனிக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அரசு பணியில் இருப்பதால் எதிர் காலத்தில் நமக்கு ஓய்வு ஊதியம், போனஸ், போன்ற வாழ்வியல் பாதுகாப்பு கிடைக்கும் என்று அசிங்கங்களையும், இழிவுகளையும் தாங்கிக் கொண்டு சகிப்புத் தன்மையோடு காலை 5 மணிக்கு எல்லாம் எழுந்து வேலைக்குச் செல்கின்றனர். மற்ற மக்களால் அசுத்தமாகிவிட்ட நகரத்தை தூய்மைசெய்கின்றனர். ஆனால் இவர்கள் வீட்டில் எவ்வித சுத்தம் இல்லாமல் குழந்தைகள் பராமரிப்பு இன்றி தலையில் எண்ணை இல்லாமலும் இவர்கள் கல்வி என்பது கேள்விக்குறியாகி நிற்கிறது.

இப்படி அனைத்து கதவுகளும் அடைக்கப்பட்ட நிலையில் வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழியில்லாமல் இப்பணியை செய்ய வேண்டியதாயிற்று. இனி குறைந்தபட்ச உரிமைகளைடக் கூட பறிப்பதற்கு தனியார் கம்பெனிகள் வந்துவிட்டது. உண்மைநிலை என்னவென்றால் இப்பணியாளர்கள் வாழ்வில் மிச்சம்- பிய்ந்துபோன செருப்பும், தேய்ந்துபோன துடப்பமும், கிழிந்துபோன காக்கி டவுசரும் தான். இவர்கள் இன்றி இயங்காது மாநகரம். தீண்டாமையின் சின்னமாக இருக்கும் இப்பணியை ஒழிக்க வேண்டும் என்பதுதான் நமது கருத்தும். இப்பணியை தனியாரிடம் ஒப்படைத்தால் யாராவது செய்துகொண்டு போகட்டும். அருந்ததியர்கள் இப்பணியை செய்வது குறையும் என்றும், மேலும் இந்தப் பணி நவீனப்படுத்தப்படும் என்பதெல்லாம் நமது கற்பனையே தவிர எதார்த்தத்தில் உண்மைநிலை வேறு. அனைத்துக்கதவுகளும் அடைக்கப்பட்ட நிலையில் புதிய பொருளாதாரக்கொள்கை விவசாயிகளையே வீதிக்கு கொண்டு வந்திருக்கும் நிலையில், நிலமற்ற- பிழைப்பதற்கு வேறு வழியில்லை என்று நினைக்கும் நமது அருந்ததியர் சொந்தங்கள்தான் இப்பணியை செய்வதற்கு முன்வரும் நிலை ஏற்படுகிறது. இக்கருத்தை சொல்வதால் இதை நாம் ஆதரிப்பதாக பொருள் அல்ல.

மாநகராட்சி -நகராட்சிகளில் குறைந்த பட்ச உரிமைகள் கூட பறிக்கப்பட்டு குறைந்த கூலிக்கு அதிக அடிமைகளை தனியாரிடம் வேலை செய்ய வேண்டியது ஏற்படும். இப்போது மாநகராட்சி. நகராட்சிகளில் குறைவான கூலி இப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டாலும் தாங்கள் குழந்தைகளை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலாவது பள்ளிக்கு அனுப்புகிறார்கள். இதையும் தனியாரிடம் ஒப்படைக்கப் பட்டால் இவர்கள் வாழ்வில் கல்வி என்பது பகற்கனவாகிவிடும். இப்படி இவர்கள் வாழ்வு துடுப்பு இல்லாத படகு போல் வாழ்க்கைப் பயணமநகர்ந்து கொண்டிருக்கும் சுழலில் புயல் போல் தனியார் கம்பெனிகள் வீசத் தொடங்கிவிட்டது. சென்னையில் ஒனிக்ஸ் என்ற தனியார் நிறுவனம் துப்புரவுப் பணியை காண்ராக்ட் எடுத்துள்ளது. அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. காலையில் வேலைக்கு குறித்த நேரத்தில் செல்ல வேண்டும். ஒரு நிமிடம் தாமதித் தாலும் அவருக்கு அபதாரம் ரூ.300/-. இது சிறுநீர் கழிக்கச் சென்றாலும், வேலையில் இருக்கும்பொழுது தேநீர் அருந்துவதைப் பார்த்துவிட்டால் வேலையிலிருந்து தூக்கி வீசப்படுவார்கள். இப்படி நிபந்தனைகளோடு 8 மணி நேரம் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். இவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் அதிகபட்சம் வெறும் 1500 ரூபாய். இது தான் தனியார் மையம்.

1991-ல் மாநகராட்சி, நகராட்சிகளில் துப்புரவுப்பணிக்கு ஆள் எடுப்பதை நிறுத்தினார்கள். அதன்பின் வேலைக்கு ஆள் எடுப்பதே இல்லை. 15 ஆண்டு காலம் கடந்துவிட்டது. அனைத்து நகரங்களிலும் மக்கள் தொகை இரண்டு மடங்கு பெருகிவிட்டது. கழிவுகளும் சாக்கடைகளும் பெருகியது. ஆனால் துப்புரவுப் பணியாளர்கள் மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகப்படுத்தாமல் மிகக் குறைவான ஆட்களை வைத்து துப்புரவுப் பணியை செய்து வருகிறது மாநாகராட்சி. தற்போது மதுரை மாநகராட்சிகளில் பணிபுரிந்துவரும் பணியாளர்கள் 1991 கணக்கெடுப்பின்படி 2100பேர் இதிலும் காலி இடங்கள் 600 என்று புள்ளி விபரம் தெரிவிக்கிறது. 1991-ல் மதுரை மக்கள் தொகை கணக்கு 8.50 இலட்சம் பேர். தற்போது மக்கள் தொகை 14 இலட்சம் பேர். இருமடங்கு பெருகிவிட்டது. ஆனால் துப்புரவுப்பணியாளர்கள் தற்போது மதுரை மாநகராட்சிகளில் வெறும் 1600 பேர் மட்டும். நான்கு பணியாளரின் பணியை ஒரு பணியாளர் செய்ய வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது. இந்நிலைதான் தமிழகம் முழுவதும் நிடிக்கிறது.

கிரிக்கெட் விளையாட்டுக்கும், காவல் துறை நவீனப்படுத்துதல் இராணுவத்தை பலப்படுத்துவது என்று பலகோடி ரூபாய் செலவு செய்யும் ஆட்சியாளர்கள் மனிதனின் அடிப்படை தேவையான சுகாதாரப்பணிக்கு எவ்வித நவீனப்படுத்துதலும் விரிவுப் படுத்துதலும் முற்றிலும் மறுத்துவருகிறது. இலாபம் இல்லையென்று காரணம் காட்டி, தனது பணப் பையை நிரப்பிக்கொள்ள இப்பணியை தனியாரிடம் ஒப்படைக்க விரைந்து செயல்படுகிறது மாநகராட்சிகள். துப்புரவுப் பணியாளர்கள் உழைப்பில் சுகாதாரத்தோடு வாழும் நாம் இவர்களுக்கு ஆதரவாகவும் தனியார் கம்பெனிகளுக்கு எதிராக குரல் எழுப்புவதும், மாற்றுத் தொழில்களைத் தேடிக்கொள்வதே சமூக நீதியாகும்.

## கண்டன ஆர்ப்பாட்டம்

தோழர் திருமாவளவன் அவர்களும், விடுதலை சிறுத்தைகள் அமைப்பும் அருந்ததியர்களை வந்தேரிகள் என்றும், தமிழர்கள் அல்ல என்றும் தொடர்ந்து எழுதியும், பேசியும் வருவதை ஆதித் தமிழர் பேரவை கண்டித்து வருகிறது. சென்னையில் நடந்த சிறுபான்மையினர் கூட்டத்தில் அதே கருத்தை பிரதிபலித்த திருமா, அருந்ததியர்களுக்கு தனியாக இடஒதுக்கீடு கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். திருமாவின் நிலைப்பாட்டைக் கண்டித்து மதுரையில் பேரவைத் தோழர்கள் சுவரொட்டிகளை ஒட்டினர். அதனால் தோழர் பேரறிவாளன் கடுமையாகத் தாக்கப்பட்டார். இதனை கண்டித்தும் திருமாவை கண்டித்தும் ஆதித்தமிழர் பேரவை தமிழகம் முழுவதும் 12.2.2007 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

ஆசிரியரும், வெளியிடுபவரும்
**தஞ்சை இளமதி,**
எண்.7, முதல் குறுக்குத்தெரு,
அஞ்சலர் குடியிருப்பு,
நாஞ்சிக்கோட்டை சாலை,
தஞ்சாவூர்